நேர்மைத்திறன்

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை வெளியீடு 4 டிசம்பர் 2008

ஊழலுக்கெதிராக போராடிய வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கும் வைபவமானது ஐ.நா வின் ஊழல் எதிர்ப்புதின விழாவை முன்னிட்டு டிசம்பர் 09 ஆம் தேதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் குழு அறை பீ இல் அதன் ஆறாவது வெற்றி ஆண்டை கொண்டாடும் முகமாக இடம்பெற்றது.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெலியமுனே அவர்கள் தனது வரவேற்புரையில் இலங்கை வரலாற்றிலே ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிசப்தமாக்குகின்ற வகையில் பல பலம் பொருந்திய அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்ற ஒரு சிக்கலான காலப்பகுதியில் இவ்வைபவம் நடைபெறுகின்றது என்றார். மேலும் அவர் ஊழலுக்கெதிராக இன்னும் உத்வேகத்துடன் போராடக் கூடிய சந்தர்ப்பம் வந்துவிட்டது என்றும் கூறினார். நாம் கொண்டுள்ள வளங்கள் மற்றும் மனித ஆளுமை என்பனவற்றின் காரணமாக, இலங்கையானது ஒரு தேசம் என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்கான ஆற்றல்களை போதியளவில் கொண்டுள்ளது. இருந்தாலும் கூட கருத்து வேறுபாடான அபிப்பிராயங்களை மௌனமாக்கும் வகையிலான துரதிஷ்டவசமான பாரம்பரியம் இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. சுதந்திரமான கருத்துக்களை சகித்துக் கொள்ள முடியாத நிலை எங்கும் ஆட்கொள்ளப்பட்டுவிட்டது. இந்தப் பாரம்பரியத்துக்கு கட்டுப்பட்டு அதற்கேற்ற வகையிலே எங்களது எல்லா செயற்பாடுகளையும் செய்ய வேண்டியுள்ளது. ஊழல் எதிர்ப்பு நோக்கில் அதிமேன்மை தகுந்தவராகவும் உலகத்தின் ஊழல் எதிர்ப்பின் பிரதிபலிப்பாகவும் விளங்குகின்றவர் என்ற வகையில் டாக்டர். பீட்டர் ஐகன் அவர்களை அறிமுகப்படுத்திய ஜே.ஸி வெலியமுனே அவர்கள், உலகளாவிய ரீதியில் ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் முதன்மை மனிதர் எனவும் அவரை வர்ணித்தார்.

டாக்டர். பீட்டர் ஐகன் அவர்கள் தனது தொடக்க உரையின் போது ஊழலுக்கெதிராக போராடுவதன் அடிப்படையானது விழிப்புணர்விலேயே தங்கி இருக்கின்றது. சிவில் சமூகத்தினரிடையேயும் தனியார் துறை மற்றும் அரசாங்கங்கள், ஏழை மற்றும் பணக்காரர்கள், கிராமப்புறங்களில் மற்றும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள், அறிவுத்திறனுடைய மற்றும் தீர்மானங்கள் எடுப்போருக்கிடையில், ஊடகங்கள் மற்றும் சாதாரண வேலையாளர்களிடையேயான கூட்டிணைவை கட்டியெழுப்ப வேண்டிய தேவையையும் வலியுறுத்தினார்.

விஷேட அதிதியாக கலந்துகொண்ட UNDP இன் வதிவிட பிரதிநிதி திரு. நீல் புஹ்னே அவர்கள் ஊழலுக்கெதிராக போராடுவது என்பது மிகவும் இலகுவாக தெரிந்தாலும் கூட உண்மையில் இது மிகவும் சிரமமானது. சமூகத்திலிருந்து தோற்றம் பெற்ற ஒன்றாக ஊழல் காணப்படுவதோடு இதனை ஒழிக்க பரந்த கூட்டிணைவுக்கான தேவையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நடுவர் குழுவின் சார்பாக பேசிய பிரபல கல்வியியலாளர் திருமதி. ஜெஸீமா இஸ்மாயீல் கூறுகையில் எங்களுக்கு மிகவும் பொறுப்பான பணியொன்று வழங்கப்பட்டிருந்தது. நாங்கள் யாரைத்தெரிவு செய்கின்றோம் என்பது தொடர்பில் மிகவும் கவனமாக இருந்தோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எச்சரிக்கையாக இருந்தோம்.

அவர் தெரிவு முறையை விளக்கிய பின்னர், அடிப்படை சமூக விழுமியங்களின் நோக்கிலும் இலங்கை மற்றும் சமூக நோக்கிலும் இந்த விருது வழங்கும் வைபவமானது மிகவும் உன்னதமான பின்னணியில் இடம்பெறுகின்றது என்று கூறினார்.

UNDP வதிவிடப்பிரதிநிதி நீல் புஹ்னே, இன்ஸ்பெக்டர் தேசபந்து சேனரத்ன, TI ஸ்தாபகர் திரு. பீட்டர் ஐகன், தே.நே.வி வெற்றியாளர்கள் துஷித, பிடிகல ரூ ப்ரியந்த பெர்னான்டோ மற்றும் திரு. ஜே.ஸி வெலியமுனே

மனதை சிலிர்க்கச் செய்த முகங்கள்

உலகளாவிய ரீதியில் ஊழலை ஒழிப்பதற்கான திட்டங்கள் மற்றும் எம்மை நோக்குகின்ற பல்வேறு புதிய முகங்களுடனும் இந்த இடத்தில் உங்கள் முன் நிற்பது புத்துணர்ச்சியை தருகின்றது. இது எங்களுக்கு எவ்வளவு பலத்தையும் உற்சாகத்தையும் தந்தது என்பதை என்னால் விபரிக்க முடியாது. இந்த வார்த்தைகளுடன் பீட்டர் ஐகன் தனது ஆரம்ப உரையை தொடங்கினார்.

இலங்கையில் மட்டுமல்லாது உலகம் பூராகவும் இருக்கும் சமூக அமைப்புக்கள் மற்றும் ஏனைய தேசிய அத்தியாயங்களுக்கும் எவ்வாறு ஊழலை இல்லாதொழிப்பது என்பதற்கு முன்னுதாரணமாகவும் முன்மாதிரியாகவும் திகழக்கூடியவாறு கடுமையாக உழைக்கும் திறமையானவர்களைக் கொண்ட குழுவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையில் இயங்கும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின் தேசிய அத்தியாயத்துக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்.

உள்ளே

2 தொடக்க உரை
3 வெற்றியாளர்களின் சிந்தனைகள்
4 கேலிச்சித்திரப் போட்டி
5 வட்டமேசை கலந்துரையாடல்
6 TISL இன் கருத்து

எதையுமே செய்ய முடியும் உறுதி கூறுகிறார் TI ஸ்தாபகர்

டாக்டர் பீட்டர் ஐகன் ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் தலைவர் தனது 2008 NIA விருது வழங்கும் வைபவத்தில் ஆரம்ப உரையில் "உங்களுடைய சமூகத்தில் பல பகுதிகளிலிருந்தான பல மதங்கள், பல குழுக்கள், பல தொழில்களைச் சார்ந்த மக்களை இந்த அறையானது கொண்டிருக்கிறது. அவர்களது ஒத்துழைப்பானது ஊழலுக்கெதிரான சாதகமான ஏதாவது நடவடிக்கையை செய்ய முடியும் என்பதைக் காட்டுகின்றது. திரு. ஒபாமா அவர்களும் "எங்களால் செய்யமுடியும்" என்று கூறியுள்ளார். உலகெங்கிலுமுள்ள ஊழலின் முறைகேடான தன்மையை மட்டுமன்றி இதன் மூலமான அழிவுகள், பாதிப்புக்களை தடுப்பதற்கான விழிப்புணர்வையும் கட்டியெழுப்ப வேண்டும். மிகவும் முக்கியமாக, நேர்மையான நண்பர்களாலும் நல்ல ஆட்சியின் மூலமாகவும் கிடைக்கப்பெற்ற நீதி என்பவற்றைக் கொண்டு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகளில் இருந்து தடுப்பதற்கான பாதுகாப்புக்களை மேற்கொள்வதற்கான கூட்டுறவு வேண்டும் என்பதையும் அழுத்திக்கூற விரும்புகிறேன் என்றார்.

TI உருவாக்கப்பட்ட காலத்தை நினைவு கூர்ந்தவாறு அவர் கூறியதாவது ஊழலுக்கெதிராக போராட வேண்டும் என்பதற்காக எனக்கு உலக வங்கியை விட்டு விலக வேண்டி ஏற்பட்டது. அந்த நேரத்தில் உலக வங்கியானது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிராக என்னை போராட அனுமதிக்கவில்லை. ஏனெனில் உலக வங்கி மற்றும் அதுபோன்ற சர்வதேச தாபனங்கள் அரசாங்கங்களுக்கு அடிமைப்பட்ட நிலையிலும் மற்றும் மீண்டும் மீண்டும் அதன் கொள்கை முறைமைகளை தீர்மானிக்கக் கூடியளவிலும் இருந்தன. உதாரணமாகக் கூறுவதாயின் பெரும்பாலான OECD நாடுகளில் உள்ளதைப் போல் ஜேர்மனியிலும் உலக மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் ஒரு வியாபாரத்தை நடாத்த விரும்பினால் அந்நிய இலஞ்சமானது முக்கியமானதாக கருதப்பட்டது.

டாக்டர் பீட்டர் ஐகன்

ஊழலை எல்லா வடிவங்களிலும் ஒழிப்பதற்கு ஊழல் தொடர்பான விழிப்புணர்வை கட்டியெழுப்புவதற்கான பணியை நாங்கள் ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் சர்வதேச களத்தில் ஊழலானது பல விதங்களில் அதாவது ஆசிரியர் ஒரு பிள்ளையை கல்வியில் பங்குபற்றுவதற்காக அதன் பெற்றோரிடம் அல்லது தாதி அல்லது வைத்தியர், அல்லது குடியேற்ற அதிகாரி போன்றோர் சிறியளவில் ஊழலை செய்கின்றனர். இங்கு ஊழலினால் ஏற்படுகின்ற மோசமான விளைவுகளுக்கும் இதன் தாக்கங்களிலிருந்தும் விழிப்புணர்வை கட்டியெழுப்புவதற்காகவும் நாம் தேவைப்படுத்தப்பட்டுள்ளோம்.

பாரியளவிலாக இன்று காணப்படும் ஊழலுக்கு சான்று பகர்வனவாக இவர் கூறியதாவது, உலக வங்கி வருடந்தோறும் ஊழலினூடாக 1000 பில்லியன் டொலர்கள் களவாடப்படுவதாக கணிப்பிட்டுள்ளது. இது பெருந்தொகையான பணம். முறைகேடான பொருளாதார தீர்மானம் எடுத்தல், பாரிய செயற்றிட்டங்களில் முறைகேடான தெரிவு போன்றவற்றினூடாகவே உண்மையான பாதிப்பு ஏற்படுகின்றது. தெற்கிலிருக்கின்ற ஊழல் தலைவர்கள், வடக்கிலிருந்தான ஊக்குவிப்பாளர்கள் மற்றும் ஊழல் விநியோகத்தர்களால் செய்யப்படும் முறை கேடான ஒப்பந்தங்கள் தவறான தீர்மானங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. இவ்வாறான ஆச்சரியப்படத்தக்க ஒப்பந்தங்கள்தான் ஐரோப்பாவில் இருக்கின்ற மற்றும் ஏனைய செல்வந்த நாடுகளில் இருக்கின்ற கம்பனிகளுக்கும் தெற்கில் இருக்கின்ற கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடம்பெறுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும். இதுவே உலகின் பல பாகங்களிலும் இருக்கின்ற வறுமை, அபிவிருத்தியின்மை, அருமை, அழிவுகள், இறப்புக்களுக்கு காரணமாகும். 11 மில்லியன் பிள்ளைகள் 05 வயதைப் பூர்த்தியடையும் முன்பே இறக்கின்றார்கள். கஷ்டமான குணப்படுத்த முடியாத நோய்களாலல்ல, வறுமை, சுகாதாரமின்மை, நீர்ப்பற்றாக்குறை காரணமாக எழும் சிறிய நோய்கள் காரணமாக. 1 பில்லியன் மக்கள் குடிநீர் இன்றி வாழ்கின்றார்கள். இவற்றை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். ஏன் இந்த உலகு இந்தளவு நம்பிக்கையற்ற கவலைக்கிடமான வன்முறைகளை பிரசவிக்க வேண்டும். இதற்கான விடை ஊழலுக்கெதிரான போராட்டம்தான் என்று நாம் நம்புகிறோம்.

உறுதியான கூட்டுமுயற்சியும் ஆதரவும் தேவை

ஊழலுக்கெதிராகப் போராடுவதென்பது இலகுவானதல்ல. அதற்கெதிராக எழுந்து நிற்க தைரியமும் உறுதியும் தேவை என்பதுடன் இது போன்ற எண்ணம் கொண்ட எல்லா மட்டங்களிலுமான பலமான கூட்டிணைவும் தேவை என்று UNDP இன் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே தேசிய நேர்மைத்திறன் விருதளிப்பு வைபவத்தின் போது தெரிவித்தார்.

2005 இல் நடைமுறைக்கு வந்த ஐ.நா வின் ஊழலுக்கெதிரான பிரகடனமானது ஊழலுக்கெதிரான விரிவான அணுகு முறையை உள்ளடக்குவதுடன் அதை தடுக்கும் மற்றும் தண்டிக்கும் அளவீடுகள் இரண்டினதும் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவதோடு நாட்டுக்குள்ளும் நாட்டின் எல்லைகளுக்கிடையிலும் காணப்படுகின்ற நிறுவனங்களில் ஊடுருவியுள்ள உலகளாவிய பிரச்சினைகளுக்கான உலகளாவிய பதிலை வழங்குவதற்கான தனித்துவமான வாய்ப்பை இது வழங்குகிறது என திரு.புஹ்னே கூறினார்.

ஐ.நா உட்பட எந்த நிறுவனமும் ஊழலில் இருந்து விடுபட முடியாது. ஐ.நாவிற்குள்ளேயே ஊழலுக்கெதிரான போராடுவதற்கான பல அளவீடுகள் உருவாக்கப்பட்டுள்ளது. முன்னைய நாட்களில் என்னுடைய வருமானம், சொத்துக்களை இன்னொருவருக்கு நான் வெளிப்படுத்தத் தேவையில்லை. ஆனால் தற்போது அவற்றை நான் வெளிப்படுத்தியே ஆகவேண்டும். தற்போது ஐ.நாவின் பணியாளர்கள் அனைவரும் ஒழுக்கவியல் பயிற்சியை பூர்த்தி செய்துள்ளனர். ஆகவே ஐ.நா கூட இதுவிடயம் தொடர்பில் விடுபட முடியவில்லை. ஆகவே எல்லா நிறுவனங்களும் அமைப்புக்களும் ஏதாவது செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என நினைக்கின்றேன்.

UNDP இன் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே

ஐ.நாவின் ஊழல் எதிர்ப்பு உடன்படிக்கை மற்றும் பல சீர்திருத்தங்களையும் சிபாரிசுகளையும் அமுல்படுத்துவதற்கான முயற்சியில் சிவில் சமூகத்தினருக்கும் தனியார் துறை தேசிய அரசுகளுடன் நேரடியாகவும் பங்காளர்களாகவும் செயற்பட ஐ.நா எத்தனித்து வருகின்றது."உலகப்பிணக்கு" என அடையாளப்படுத்தி அழைக்கப்படும் திட்டத்திலும் ஐ.நா தனியார் துறையினரோடு பங்காளராக இணைந்து செயற்படுகின்றது. இது 10 கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. இதில் ஊழலுக்கெதிராக போராடுவது ஒரு கொள்கையாகும். உதாரணமாக வியாபார நடவடிக்கைகளானவை வெளிப்படையானதும் நேர்மையானதுமான வழியில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். தற்போதைய ஐ.நா வின் செயலாளர் நாயகம் பங்கி மூன் அவர்களினால் கூறப்பட்ட ஒரு கூற்றை இந்த நாளுக்கு அடையாளமாக கூறி தனது உரையை முடித்துக் கொண்டார். இந்த உலகமானது பேராசை, ஊழல் என்பவற்றால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார நெருக்கடியினால் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சுகாதாரத் தேவை, பாடசாலை, சுத்தமான நீர், உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அவசியமாக தேவைப்படுகின்ற பில்லியன் டொலர்கள் நிதியானது இலஞ்சம் மற்றும் ஏனைய தவறான பாவனைகள் காரணமாக களவாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஊழலைத் தடுப்பதும் நேர்மைத்திறனை உறுதிப்படுத்துவதும் அரசாங்கங்களுக்கும் பொருளாதார நிறுவனங்களுக்கும் மட்டும் உரிய பணியல்ல. ஊழல் எங்கள் எல்லோரையுமே பாதிக்கிறது. இது சோசலிச நிறுவனங்கள் சட்டவாட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறிப்பதாக உள்ளதுடன் பயங்கரவாதிகளின் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதை அங்கீகரிப்பதாகவும் உள்ளது. இந்த சர்வதேச தினத்தில் நேர்மைத்திறனை உறுதியாக்குவதற்கு எங்களது பங்களிப்பையும் உலகத்தை முறையான ஊழலுக்கெதிரான விதிகளை நோக்கி திருப்புவதற்கு எங்களால் ஆன பங்களிப்பை செய்வோம்.

விருது வென்றவர்களது கருத்து

ஊடகங்களினால் வெளிப்படுத்த போதியளவு ஊழல்.

2008 ஆம் ஆண்டுக்கான தேசிய நேர்மைத்திறன் விருதை வென்ற புலன் விசாரணை ஊடகவியலாளர் துஷித பிடிகல அவர்கள் சிரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விமர்சனா என்ற நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் ஆவார். இந் நிகழ்ச்சியானது நாள்தோறும் இடம்பெறும் பாரியளவிலான ஊழலையும், நீதி மழுங்கடிக்கப்படுதல் தொடர்பாகவும் மற்றும் உயர் அதிகாரிகளின் நம்பகமற்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும், அரசியல் தலையீடுகள், பொது ஆதனங்களது முறையற்ற பாவனை என்பன தொடர்பானதாகும். தொலைக்காட்சி மூலமாக அவரால் வெளிப்படுத்தப்படும் இவ்வாறான விடயங்கள் சமூகத்தின் மத்தியில் பாரிய தாக்கத்தையும் அக்கறையையும் உண்டாக்கியுள்ளது.

விருதை பெற்றுக் கொண்ட பின்னர் பேசிய துஷித பிடிகல அவர்கள் துரதிஷ்ட வசமாக எங்களது நாட்டில் ஊடகங்களினால் வெளிப்படுத்தப்படுகின்ற அளவுக்கு போதியளவு ஊழல் காணப்படுகின்றது என்றாலும் ஊடகம் என்ற முறையில் ஒரு ஊழல் நடைபெற்ற பின்பே அதை வெளிப்படுத்த முடியும். அவை இடம்பெற முன்னர் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கூடியவர்களது மௌனமே இதற்குக் காரணமாகும். TISL ஆனது சிவில் சமூகத்தினரை ஊழல் இடம்பெறுவதை குறைப்பதற்காக ஊக்குவிப்பது போல் கொள்கை வகுப்பாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

ஊழலுக்கெதிராக போராடுவதென்பது மிகவும் கடினமானது ஏனெனில் ஊழலுக்கெதிராக முறைப்பாடு செய்ய முன்வருபவர்களை பாதுகாப்பதற்கு முடியாதுள்ளமையாகும்.

இவ்வாறான விருதளிப்பு விழாக்களது தேவை ஒருநாள் இல்லாமல் ஆகக்கூடியளவுக்கு ஓர் உதயம் ஏற்படும் என தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒவ்வொருத்தரும் தன் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு நடந்து ஒரு சிறந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் எனக்கூறி அவர் தனது உரையை முடித்துக் கொண்டார்.

கல்வித்துறையில் ஊழல்

2008 ஆம் ஆண்டுக்கான தேசிய நேர்மைத்திறன் விருதை வென்றெடுத்த ப்ரியந்த பெர்னான்டோ அவர்கள் ஒரு அரசாங்க ஆசிரியரும் தொழில் சங்கவியலாளரும் ஆவார். இவர் றுஹுரட பிரதேசத்தில் கல்வி நிர்வாகம் தொடர்பில் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவு மாற்றங்களை ஏற்படுத்தியவர் ஆவார். உறுதியான தலைமைத்துவப்பண்பு கொண்டவராக அடையாளம் காணப்பட்ட இவர் பல காத்திரமான எதிர் விளைவுகளை உண்டு பண்ணிய பல முக்கியமான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

பார்வையாளர்களை நோக்கி பேசிய போது இலங்கை மதிப்பு மிக்க பௌத்த நாடு என்றாலும் கூட இங்கு ஊழல் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. சிறுவர்களால் வரையப்பட்ட பெரும்பாலான சித்திரங்கள் ஆசிரியர்களை பிரதிபலிப்பதாக இருப்பதையிட்டு நான் மிகவும் குழப்பத்தில் இருக்கிறேன். உண்மையில் நாங்கள் பல பில்லியன்களை திருடப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். கல்வித்துறை ஏன் ஊழலில் சிக்கியுள்ளது என்பதற்கு முக்கியமான ஒரு காரணம் அது ஊழலில் ஈடுபடுகின்ற அதிகாரிகளால் கட்டுப்படுத்தப்படுவதாகும் என நான் நினைக்கின்றேன். 200 பேரில் 198 பேர் பொருத்தமற்றவர்கள். ஒரு முறையான கல்வி முறைமையை கொண்டு நடாத்த அவர்களால் முடியாது.

TISL ஆனது ஊழல் தொடர்பான செயற்றிட்டங்களை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செய்து வருகிறது என வியந்த அவர் ஊழலுக்கு எதிராக போராடுவதற்கான சமூக நிறுவனங்களது தேவையை அழுத்திக் கூறினார். விருதை வென்றெடுப்பதை விட எங்களது மக்களிடையே இருக்கின்ற திருட்டுப் பொறிமுறையை சுத்தப்படுத்துவதே தனது நோக்கம் என்றார்.

இலங்கையை மீட்டெடுப்போம்.....

சிறப்பு விருதை வென்ற இன்ஸ்பெக்டர் தேசபந்து சேனரத்ன அவர்கள் பொதுஹர பொலிஸ் பிரிவின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆவார். ஊழலைக் குறைப்பதற்காக முழுமையான மாற்றம் ஒன்றைக் கையாண்டு செயற்பட வேண்டும் என்பது இவரது நோக்கமாகும். பொலிஸாரை உண்மையான பொது நிறுவனமாக மாற்ற அவர் தனது பணியகத்தை சிநேகபூர்வமான சூழலாக மாற்றிக்கொண்டார். ஒரு கனிஸ்ட ஊழியராக இருந்த அவர் தனது தலைமைத்துவத்தை வெளிப்படுத்திய விதம் மிகவும் அதிசயிக்கத்தக்கதாகும்.

விருதைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர் உணர்வுபூர்வமாக பேசிய போது தனது பெற்றோர், குடும்பம் மற்றும் சக ஊழியர்களுக்கு தனது நடவடிக்கைகளைச் செய்வதில் பக்க பலமாக நின்றமைக்கு நன்றி கூறினார்.

TISL இனது ஊழலை ஒழிப்பதற்கான செயற்பாடுகளானவை மிகவும் பாராட்டப்பட்க கூடியவை. ஏன் இன்னும் பிறக்காத கருவில் உள்ள குழந்தைகள் கூட TISL இன் முயற்சிகளுக்கு நன்றி கூற வேண்டியவர்கள். இலங்கை ஒரு அதிசயமான நாடாகும். ஆனாலும் நாங்கள் இன்று உலகில் எந்தளவு இருக்கின்றோம் என்பது மிகவும் கவலைக்குரியது. TISL ஆனது இன்றுபோல என்றும் அதேயளவு புகழையும் உறுதியையும் பெற வேண்டும் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

ஊழல் எதிர்ப்பு கேலிச்சித்திரங்களில் மிகுந்த ஆர்வம்

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய நேர்மைத்திறன் விருதளிப்பு வைபவம் 2008 க்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கேலிச்சித்திரங்களை பார்வையிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

விருதை வென்றவர்கள் தங்களுக்குரிய வெற்றிச்சின்னங்களையும் பணப்பரிசுகளையும் விழாவின் போது பெற்றுக்கொண்டனர்.

நடுவர்கள் குழுவின் சார்பாகப் பேசிய எஸ்.ஜே புன்சிஹேவ அவர்கள் அவை மிகவும் சந்தோஷமளிப்பதாகவும் வேடிக்கையாகவும் ஆச்சரியப்படக்கூடியதாகவும் இருந்ததோடு கேலிச்சித்திரங்களில் பல மிகவும் நகைச்சுவையாகவும் சித்தரிக்கப்பட்டிருந்தன.

நடுவர்களுக்கு வினோதமான விடயம் என்னவெனில் அவர்கள் அந்தக் கேலிச்சித்திரங்கள் ஊடாக பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்துக் கொண்டார்கள். நிர்வாகத்துறையினர், பொலிஸ் அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள், சட்டவாளர்கள், அரசியல் வாதிகள், பாடசாலை அதிபர்கள், பல உயர் பதவிகளை வகிப்பவர்கள் மற்றும் புகழ் பெற்றவர்கள் போன்றோராவர். இவ்வாறான மக்கள் வழமையாக விலையுயர்ந்த ஆடைகளையே அணிகின்றார்கள். அவர்கள் Pajeros களிலும் volves களிலும் பயணிக்கிறார்கள். எங்களுக்கு முன்னால் புன்னகைக்கிறார்கள். எங்களுக்குப் பின்னால் நின்று சிரிக்கிறார்கள். அவர்களது வலது கை எதை எடுக்கிறது என்பது அவர்களது இடது கைக்கு தெரிவதில்லை. இவர்கள் தமது சொத்துக்களை பிரகடனப்படுத்துவதற்கு சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். ஆனால் அவர்களது வங்கிக் கணக்கு யாருக்கும் தெரிவதில்லை. போயா தினங்களில் sil களில் ஈடுபடுகின்றனர். பொதுக் கூட்டங்களில் தத்துவ சொற்பொழிவு ஆற்றுகின்றனர். விஷேடமாக Damma பாடசாலைகளில் என்றார்.

நாங்கள் உலக வங்கிக்கு செலுத்தக் கடமைப்பட்டிருக்கும் பணத்துக்கு சமமானளவு தொகை எங்களது நாட்டில் ஒரு நாளைக்கு இடம்பெறும் ஊழலின் அளவுக்கு சமமாக இருக்கும் என தான் நம்புவதாகவும் கூறினார். சிலவேளைகளில் தேசத்தின் தூண்கள் "தேசத்தின் கூட்டுப் புழுக்கள்" என வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்கப்பட வேண்டியவர்கள்.

கேலிச்சித்திரங்களை வரைந்தவர்கள் எங்களுக்கு நிர்வாகத்துறையினரின் விஷேட குணங்களையும் சட்டவாக்குனர்களே சட்டத்தை அழிப்பவர்களாகவும் இருக்கின்றனர் என்பதையும் எங்களுக்கு நினைவுபடுத்தியமைக்கு கேலிச்சித்திரங்களை வரைந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

மிகவும் பெறுமதியான ஓர் அனுபவம்

TISL இணைப்பாளர் ஹஸினி ரத்னமல்ல அவர்கள் இந்தக் கேலிச்சித்திரப் போட்டியானது தனக்கு மிகவும் பெறுமதியான அனுபவம் என்றார். இலங்கை பூராகவும் இருந்து கிடைக்கப்பெற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆக்கங்களிலிருந்து கிடைத்த மக்களது பதிலானது மிகவும் பாரியதாகும். இது ஊழலுக்கு எதிராக எங்களது நாட்டில் எவரும் குரலெழுப்பாத நிலைக்கு எதிராக குரலெழுப்புதலை காட்டுகின்றது என்றார்.

இது எங்களுடைய ஒழுங்கமைத்தல் தொடர்பில் ஒரு சவாலாக இருந்தது. நாங்கள் பத்திரிகை விளம்பரங்களினூடாகவும் எங்கும் விநியோகிக்கப்படக் கூடிய துண்டுப் பிரசுரங்களினூடாகவும் வெளியிட்டிருந்தோம். ஆரம்பத்தில் இதற்கான ஆர்வம் மெதுவாகவே காட்டப்பட்டது. இருந்தாலும் மாத இறுதியில் இதற்கான ஆக்கங்கள் வெள்ளம் போல் கிடைக்கப்பெற்றன என ஹஸினி நினைவு கூர்ந்தார்.
பெரும்பாலான ஆக்கங்களின் தராதரமானது மிகவும் உயர்வானதாக இருந்தது. அது எந்தளவு மக்கள் நல்லாட்சி மற்றும் ஊழல் தொடர்பான விடயங்களில் விழிப்பாக இருக்கின்றனர் என்பதை எமக்குக் காட்டியது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் சில கேலிச்சித்திரங்கள் சிலவிடயங்களை மிகவும் நுணுக்கமாக சுட்டிக்காட்டியிருந்தன. உதாரணமாக வடக்கு கிழக்கிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆக்கங்கள் யுத்தத்தின் போது எவ்வாறு ஊழல் இடம்பெறுகின்றது என்பதை உணர்த்தி நின்றன. புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகளில் இருந்து வந்த ஆக்கங்கள் சட்டரீதியற்ற முறையில் மரங்களை வெட்டுவது தொடர்பானதாக காணப்பட்டன.

சுதந்திரமான நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டவுடன் எங்களிடம் சிலர் முறைப்பாடுகளைச் செய்தனர். ஆனால் நாங்கள் தெரிவு மிகவும் போட்டியானதாக இருந்தது என்பதையும் தெரிவு முறைமை இடம்பெற்ற விதத்தையும் விளக்கிக் கூறியபோது அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள் என ஹஸினி கூறினார். மொத்தமாக 20 வெற்றியாளர்கள் தமது பரிசில்களைப் பெறுவதற்காக வந்திருந்தனர். அதில் கல்முனையிலிருந்தும் பதுளையிலிருந்தும் வந்த இருவர் முதன்முறையாக கொழும்புக்கு வந்திருந்தவர்கள் ஆவர்.

தெரிவு செய்யப்பட்ட கேலிச்சித்திரங்களை உள்ளடக்கிய புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அது எதிர் காலங்களில் இடம் பெறும் நடமாடும் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படும் என்றும் கூறினார்.

'அங்கீகாரத்திற்கான சைகை'

வயது வந்தோர் பிரிவில் முதல் பரிசை வென்ற ப்ரீதி சம்பத் கன்னங்கர தினமின சிங்களப் பத்திரிகையின் கேலிச்சித்திரம் வரையுனர் ஆவார். அவர் 566 ஆக்கங்களில் முதன்மை வகித்து 50 000 ரூபா பரிசினைப் பெற்றுக் கொண்டார்.(மொத்தமாக 1003 ஆக்கங்கள் காணப்பட்டன)

ஆரம்பத்தில் இப்போட்டியில் பங்குபற்ற எனக்கு ஆர்வமிருக்கவில்லை என்றும் பத்திரிகைகளில் கூட கேலிச்சித்திரம் வரைபவர்களும் பங்குபற்றலாம் என்று விளம்பரத்தில் கூறப்பட்டிருந்ததால் நானும் ஓர் ஆக்கத்தை அனுப்பினேன் என அவர் கூறினார்.

பத்திரிகைகளுக்கு கேலிச்சித்திரங்கள் வரைவதில் சில மட்டுப்பாடுகளுண்டு. ஆனால் திறந்த போட்டியில் பங்குபற்றும் போது எமது சிந்தனைகளை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியும் என்றார். இவ்வாறான போட்டிகள் நடாத்தப்படுவது நன்று. நாங்கள் எங்களது சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை பெறுகின்றோம். இந்த விருதானது இதற்கான அங்கீகாரத்துக்கான ஒரு சமிஞ்சையாகும்.

கூட்டு முயற்சிகளை நோக்கி......

அண்மையில் TISL இனால் ஏற்பாடு செய்யப்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடி மீதான அரச பரிணாமங்கள் என்ற வட்ட மேசைக் கலந்துரையாடலில் உரையாற்றிய TI இன் ஸ்தாபகர் டாக்டர் பீட்டர் ஐகன் அவர்கள் உலகப் பொருளாதாரத்தின் விளைவாக ஏற்படுகின்ற எதிரான தாக்கங்கள் குறிப்பாக அபிவிருத்தி அடையாத நாடுகளில் பரவுவதைத் தடுப்பதற்காக உடனடியான கூட்டு முயற்சிக்கான தேவையை வலியுறுத்தினார். மேலும் அவர் அரச பரிபாலனங்களில் ஏற்படுகின்ற குறைபாடுகளே இந்த நெருக்கடிக்கு இட்டுச்செல்கின்றன என்பதுடன் இந்நிதி நெருக்கடிக்கான பொறுப்பை அரசாங்கங்கள் மக்களுக்கு கூற வேண்டியதற்கான பாரம்பரியம் ஒன்றை அமுல்படுத்துவதற்கான செயல்திட்டத்தில் ஒரு கூட்டான பங்களிப்பை ஆற்றுவதற்கு வர்த்தகர்களும் சிவில் சமூகமும் முன்வர வேண்டும் என்பதை அழுத்திக்கூறினார்.

தற்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான ஒரு மாற்றமான அணுகுமுறை ஒன்றாக நல்லாட்சியை உருவாக்குவதற்கு சிவில் சமூகம், ஊடகங்கள், கல்வியியலாளர்கள், வர்த்தக சங்கம், தனியார் துறை, பல்லின பங்காளர்கள், அரசாங்கங்கள் என்பன விட்டுக்கொடுப்புடன் ஒன்று பட்டு செயற்படக்கூடிய புது முறைமை ஒன்றைத் தாபிப்பதே இலங்கையை இந்த உலக நிதி நெருக்கடியானது பாதிக்காமல் பாதுகாக்கும் என்றார்.

ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் றொபர்ட் ப்ளக் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் சொத்துக்களின் பெறுமதிகளின் வீழ்ச்சியும், கடன் வழங்கல் தொடர்பிலான கட்டுப்பாடுகளுமே இந்நிதி நெருக்கடிக்கான காரணமாகும்.

எவ்வாறெனில் ஒரு பொருளாதாரமானது மற்றைய பொருளாதாரங்களில் பணிப்பந்து போன்ற விளைவுகளைக் கொண்டிருக்கின்றது. அரச தலையீடுகள் அவசியமாயினும் கையாளப்படும் விதிகள் தொடர்பில் ஒரு நெறிமுறையான அடிப்படையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

வியாபார அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் டாக்டர் சரத் அமுனுகம தற்கால நிலைமையை விளக்குவதில் இது ஒழுங்கு விதிகளின் குறைபாடுகளாலும் செயற்றிட்டங்கள் மீதான மேற்பார்வை இன்மையினாலும் ஏற்பட்ட நம்பிக்கை மீதான நெருக்கடி என்றார். இந்த நிதி நெருக்கடியானது ஆடைத் தொழிற்சாலை, தேயிலை, இறப்பர், உல்லாசப் பிரயாணம் போன்ற துறைகளில் உலகளாவிய கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக இலங்கையின் ஏற்றுமதியிலும் பாதிப்பு ஏற்படும் என்றார்.

வங்கிகள் பண நிரம்பலைச் செய்ய முடியாதுள்ளமையானது அந்நியச் செலாவணியை ஈட்டுதலில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை முன்னிட்டு செயல்படும் நிலையில் உலக வங்கி இல்லை. ஏனெனில் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் பெரிய வர்த்தகர்கள் கூட கடன்பெறுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். டாக்டர் அமுனுகம மேலும் பேசுகையில் சுனாமியின் போது பிரதானமாக உதவிசெய்த உலக வங்கி, IMF, ADB, US, EUROP போன்றவற்றிலிருந்து இலங்கைக்கான உதவிக்கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. இன்று இலங்கையானது இந்தியா, அவுஸ்திரேலியா, ஈரான், சீனா மற்றும் ஹங்கேரி போன்ற நாடுகளிலிருந்து இரட்டிப்பாக உதவியைப் அதாவது 16 அமெரிக்க டொலர் பெறுமதியான செயற்றிட்டங்கள் பெற்று வருகின்றது. ஊழல் தொடர்பாக அவர் பேசுகையில் பெருமளவிலான ஊழல் மற்றும் போட்டியானது இருபக்க உதவி பெறுவது தொடர்பானதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் அதன்போது ஏலம் விடுபவர்களுக்கும் உள்ளூர் முகவர்களுக்குமிடையில் பாரிய கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன.

Finlay PLC இன் தலைவரான குமார் ஜயசூரிய அவர்கள் தற்போதைய நிலைமைக்குப் பதிலாக தனியார் துறையினர் அவர்களாகவே திறமையான வினைத்திறனான நடபடிகளை பிரதானமாகக் கொண்ட முறைமைகளை பிரயோகிக்க வேண்டும் என்று கூறினார். வங்கிகளை நோக்கி அவர் கூறியதாவது திரவத்தன்மை வற்றி விட்டது இதன் விளைவாக பணக்கிடைப்பனவு இல்லை. வட்டி வீதத்தை வங்கிகள் அதிகரித்து விட்டது பணத்தை பெறுவதைச் சிரமமாக்கி விட்டது என்றார். தனியார் மயமாக்கல் தொடர்பாக அவரது கருத்து என்னவென்றால் அரசாங்கமானது தனியார் துறையினர் மீதான தனது கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டும். தனியார் துறையினரது செயற்பாடுகளையும் முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும். வளர்ச்சிப் பொறிமுறைக்கு தனியார் துறையினர் பங்களிப்புச் செய்வதற்கு அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்குத் தேவை.

ADB இன் இலங்கைக்கான பணிப்பாளர் டாக்டர் றிச்சார்ட் வேர்க் அவர்கள் ஊழலுக்கு எதிராக போராடுவது என்பது அரசாங்கம், தனியார் துறை, சர்வதேச நிறுவனங்கள் மட்டுமல்லாது சிவில் சமூகத்தினரதும் பங்களிப்பை தேவைப்படுத்துகின்ற ஒரு கூட்டு முயற்சியாகும் என்றார்.

LIRNEA இன் பணிப்பாளர் டாக்டர் கர்சாட் டி சில்வா கூறுகையில் உலகளாவிய பொருளாதார நெருக்கடியானது உள்நாட்டு பணச்சந்தைகளிலும் பிரச்சினைகளை உண்டு பண்ணக்கூடியளவுக்கு ஒரு நிலையை தோற்றுவித்துள்ளது. நிதிக்கிடைப்பனவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அதியுயர் வட்டி வீதங்களை உருவாக்கியுள்ளதுடன் கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பிலும் சிக்கலை உருவாக்கியுள்ளது.

இந்த முக்கியமான கலந்துரையாடலானது இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவரான சந்திரா ஜயரத்ன அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

TISL இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.ஸி வெலியமுனே வட்டமேசை கலந்துரையாடலுக்கு வருகை தந்த அதிதிகளை வரவேற்கின்றார்.

TISL ஆனது அரசின் ஊழல் ஒழிப்பு சட்டவாக்க யோசனைக்கு பாராட்டுத் தெரிவிக்கின்றது.

ஐ.நாவின் ஊழல் எதிர்ப்பு தின விழாவை முன்னிட்டு நான்கு வருடங்களுக்கு முன்னால் இலங்கையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான பிரகடனத்தை அமுல்படுத்துவதற்கான படிக்கல்லாக சட்டமியற்றுவதற்கான இலங்கை அரசின் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவானது தனது பாராட்டை தெரிவிக்கிறது.

TISL இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.ஸி வெலியமுனே ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த போது பல்வேறு பாகங்களிலிருந்தும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து, மக்கள் பயமோ பாகுபாடோ இன்றிய சட்ட அமுலாக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது CIOBAC, UNDP, தூயகரங்கள் செயற்பாட்டு அமைப்பு மற்றும் என்பன TISL என்பன ஐ.நாவின் ஊழல் எதிர்ப்பு பிரகடனத்தை அமுல்படுத்துவகற்காக பிரதானமாக செயலாற்றின என்றார்.

தகவல் பெறுவதற்கான உரிமைகள் சட்டம் மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டம் போன்ற புது விதிகளின் ஊடாக வெளிப்படைத் தன்மைக்கான புது முறைமையை உருவாக்க முடியும் என ஆலோசனை கூறிய அவர் ஆட்சி நடவடிக்கைகளிலும் வெளிப்படைத்தன்மை காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நாவின் பிரகடனம் கூட ஊழலை ஒழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற அமைப்புக்களுக்கு உறுதியை வழங்குவதும் சிவில் சமூகத்தினரோடு இதற்காக கூட்டுறவுடன் பணியாற்றுவதும் தேவை என்கிறது என்றார். இலங்கையில் ஊழலை ஒழிப்பது தொடர்பில் சிவில் சமூகத்தினரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான தெரிவுக்குழு தொடர்பில் TISL இன் கருத்து

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கையில் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவானது பாராளுமன்ற தெரிவுக்குழு முறைமையில் இன்னும் வெளிப்படைத்தன்மையும் நீதியும் இருக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை சுட்டிக்காட்டியது. அறிக்கையிலுள்ள அமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டையும் மறைமுக சம்பாத்தியங்களையும் மறுத்தமை தொடர்பில் TISL கூட குறித்த குழுவானது முடிவுக்கு வர முன்னர் அரசியல் சொல்லாட்சி தவிர்த்தமை மற்றும் இயற்கை நீதியின் முக்கியமான விடயங்களை பின்பற்ற தவறிவிட்டது என்றும் கூறியது. அற்பத்தனமான அரசியல் இலாபங்களுக்காக பாராளுமன்ற சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்யாத உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவையை மீண்டும் மீண்டும் TISL அழுத்திக் கூறியது.

TISL உறுதியாகக் கூறியது என்னவென்றால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கும் எல்லா தகவல்களும் இந்நாட்டின் மக்களுக்கும் இலவசமாக கிடைக்கப்பெற வேண்டும் என்பதாகும். நிறைவேற்று, நீதி, பாராளுமன்றம் உட்பட எல்லா நிறுவனங்கள் மற்றும் இதன் குழுக்கள் அனைத்தும் மக்களது பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இவை மக்களது நிதியைக் கொண்டு நடாத்தப்படுவதனாலாகும்.

இறுதியாக TISL உத்தரவாதப்படுத்தப்படாத மற்றும் அரசியல் சக்திகளால் மக்கள் சமூகத்தின் பாரம்பரிய உரிமைகளை வெட்டி விடும் விதமாக திட்டமிடப்பட்ட ஆயத்தங்கள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் நல்லாட்சி, வகை கூறல் என்பவற்றை உருவாக்குவதற்காக பணியாற்றவும் அழைப்பு விடுத்தது.

மேலதிக முழுமையான விபரங்களுக்கு www.tisrilanka.org

பத்திரிகையாளர்களின் செயலமர்வில் சாதகமான பதில்

பதுளையில் இடம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கான TISL செயலமர்வில் பேசிய ஒரு பங்கேற்பாளர் தான் முதற்தடவையாக இவ்வாறான பயிற்சித்திட்டத்தில் பங்கேற்பதாகவும் இப்போது சமூகப் பொறுப்புடைய ஊடகவியலாளராக பணியாற்றுவதற்கு தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் கூறினார். பரவலாக ஊழல் இடம்பெறுகின்ற இடம் பதுளை என்பதை ஏற்றுக் கொண்ட அவர் இதற்குப் பிறகு தானாகவே ஊழலை எதிர்த்துப் போராடுவதாகவும் கூறினார்.

இந்த இரண்டு நாள் செயலமர்வில் பங்கேற்றவர்கள் மிகவும் பொறுப்புடைமையுடைய பத்திரிகையாளர்களாக கடமையாற்றுவதற்குரிய அறிவையும் முறைமைகளையும் தமக்கு கற்றுத் தந்தமைக்காக TISL ஐப் போற்றினர். மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லேக் ஹவுஸ், SLBC, ரூபவாஹினி, ஊவா சமூக ஒலிபெருக்கி, சிரச, லங்கா தீப, திவயின, தினக்குரல் ஆகியவற்றின் நிருபர்கள் உள்ளடங்கலாக 27 பேர் பங்குபற்றினர்.

பீட உறுப்பினர்களாக புலனாய்வுப் பத்திரிகையாளர் பொத்தல்ல ஜயந்த, TISL அதிகாரிகள் ஆனந்த ஜயசேகர, துலீகா விதன பதிரன என்போர் கடமையாற்றினோர்.

TISL வெளியீடுகள்.

நல்லாட்சி அறிக்கை 2008

2007/2008 காலப்பகுதியில் நிலையை விளங்கிக் கொள்ள முயற்சிக்கும் எந்த நபருக்கும் அல்லது நிறுவனத்துக்கும் பொருத்தமான முக்கியமான அம்சங்களையும் பகுதிகளையும் இந்த அறிக்கை கொண்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கென முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டமை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவற்றினூடாக பல குறிப்பிடத்தக்க ஊழல் நடவடிக்கைகள், முறையற்ற முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சி தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றை பின்விளைவாகக் கொண்ட ஆண்டாக காணப்படுகின்றது.

மக்களால் எழுப்பப்பட்ட முக்கியமான விடயங்கள், அரசின் வெற்றி தோல்வி மற்றும் அரசினால் எடுக்கப்படக்கூடிய பிரதியீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

TISL அலுவலகம் 28/1, புள்ளர்ஸ் லேன், கொழும்பு 07 இல் கிடைக்கும். - 011 2501474

ஊழல் எதிர்ப்பு கேலிச்சித்திரங்கள்

TISL இனால் நடாத்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு கேலிச்சித்திரப் போட்டிக்காக அனுப்பப்பட்ட ஆக்கங்களில் தெரிவு செய்யப்பட்டவை இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்கள், மதங்களைச் சேர்ந்த 7 தொடக்கம் 76 வயது வரையான ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆக்கங்கள் கிடைக்கப்பட்டன. அவைகள் எமக்கு ஊழலை ஒழிப்போம் என்ற ஒரு செய்தியையே எங்களுக்கு கூறின.